# பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி விமர்சம்

ஸ்ரீ.உ.வே.ப்ர.ப.அண்ணங்கராசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்

''ஸம்ஸ்ப்ருஶ்ந் ஆஸநம் ஶௌரே: விது₃ரஸ் ஸ மஹாமதி:'' என்கிற மஹாபாரத ஶ்லோகத்தை நம் பூருவாசாரியர்கள் விஶேஷமாக எடுத்தாள்கின்றனர். ''விதுரர் தம்முடைய க்ருஹத்தில் கண்ணபிரானுக்குத் தாமே இட்ட ஆஸனத்தில் தமக்கே அதி சங்கை யுண்டாகி அவ்வாஸனத்தைத் தடவிப் பார்த்தார்'' என்று மேற் காட்டிய ஶ்லோகத்திற்குப் பொருள் அருளிச் செய்யப்படுகிறது. திருவாய்மொழியின் ஈடு முப்பத்தாருயிரப்படியிலும் அழகிய மணவாளப்பெருமாள் நாயனுர் அருளிச் செய்த திருப்பாவை ஆருயிரப்படியிலும் ஜநந்யாசார்யரும் மணவாளமாமுனிகளும் அருளிச்செய்த ஸ்ரீவசநபூஷண வ்யாக்யானங்களிலும் இந்த இதிஹாஸம் இங்ஙனமே அருளிச்செய்யப்பட்டுள்ளது. ''ஸம்ப்ருஶ்ந்'' இத்யாதி ஶ்லோகமும் காட்டப் பட்டுள்ளது. அந்த ஶ்லோகம் ஸ்ரீமஹா பாரதத்தில் உத்யோகபர்வத்தின் உள்ளீடான பகவத்யாந பர்வத்தில் 94ஆம் அத்யாயத் தில் 63ஆவது ஶ்லோகமாக இக்காலத்திய அச்சுப் புத்தகத்தில் காண்கிறது. ''ஸம்ஸ்ப்ருஶ்ந் ஆஸநம் ஶௌரேர் ஹமாம்திருபாவிஶத்' என்று மூலத்தில் பாடம் காண்கிறது. ''... விது₃ரஸ் ஸ மஹாமதி:'' என்று நம் ஆசார்யர்கள் உதாஹரித்துளர்; ஜநந்யாசார்யர் மாத்திரம் மஹாமதிருபாவிஶத்'' என்றே பாடம் காட்டியிருக்கிருர். இப்பாடபேதம் ஒரு பெரிதான விஷயமல்ல; எவ்வாருயினு மாயிடுக. இந்த ஶ்லோகத்திற்கு நம்மவர்கள் அருளிச்செய்துள்ள பொருள் ப்ரகரணத் திற்கு பொருந்தாதது போல் தோன்றுகிறது. விதுரர் தமது திருமாளிகையிலே தாமிட்ட ஆஸனத்தைத் தடவிப் பார்த்ததாகவன்றே நம்மவர்கள் பொருள் அருளிச்செய்திருப் பது; மூலத்தில் இந்த ஶ்லோகம் எந்த ப்ரகரணத்தில் இரா நின்றதென்ருல், விதுரர் திருமாளிகையினின்றும் கண்ணபிரான் துரியோதனனது ஸபாமண்டபத்திற்கு எழுந்தருளின பிறகு அங்கு துச்சாஸநன், ஸாத்யகி, கர்ணன், சகுநி, துர்யோதனன், கண்ணன் விதுரர் முதலானுேர் வீற்றிருக்கு மாற்றைக் கூறும் ப்ரகரணத்திலுள்ளது. விதுரர் திருமாளிகை விருத்தாந்தம் 91ஆவது அத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த ப்ரகரணத்தில் இந்த ஶ்லோகம் காணப்பட வில்லே. துர்யோதன சபையில் நடந்த செய்தியைக் கூறுமிடத்துள்ள ஶ்லோகத்தை மேற்கொண்டு இங்ஙனே பொருள் கூறுதல் எங்ஙனே பொருந்தும்? விதுரர் கண்ணபிரானுக்கு அந்தரங்க பக்தராதலால் அப்பிரானுடைய ஆஸனத்தைத் தொட்டுக் கொண்டு மிகவும் ஸமீபஸ்தராய் உட்கார்ந்தார் என்று தான் ப்ரகரணத்திற்குச் சேரப் பொருள் சொல்லத்தக்கதாகத் தோன்றுகிறது. விதுரர் தமது திருமாளிகை யில் கண்ணபிரானுக்கு ஆஸனமிட்டதாக வாவது தாமும் ஆஸனத்தில் உட்கார்ந்ததாக வாவது மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக் கவில்லே. இப்படியிருக்க நம் ஆசார்யர்கள் ''ஸம்ஸ்ப்ருஶ்ந்'' இத்யாதி ஶ்லோகத்திற்கு வேறு வகையாகப் பொருள் அருளிச் செய்தது என்னே! என்று அடியேனுடைய நெஞ்சம் ஶங்கா களங்கிதமாயிரா நின்றது.

இதற்கு இங்ஙனே சிலர் விடையளிக்கக்கூடும்; இதிஹாஸ புராணங்களெல்லாம் இக்காலத்தில் பல வகையாக விகாரப்பட்டிருப்பதால் இந்த ஶ்லோகம் மஹாபாரதத்தில் இடம்மாறி அச்சிடப்பட்டிருக்கலாம்; அச்சுப் புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு பூர்வாசார்யஶ்ரீஸூக்திகளில் அதிஶங்கை கொள்ள வொண்ணுதென்பர்.

இதிஹாஸபுராணங்களுக்கு ஆசார்யர்களின் காலத்திலிருந்த ஸந்நிவேசமும் இப்போதய ஸந்நிவேசமும் மாறுபாடுற்றிருக்கிற தென்பது ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம்; அத்யாயக்ரமத்திலும் ஶ்லோகங்களின் ஆநுபூர்வியிலும் பாட ப்ரக்ரியைகளிலும் வாசாமகோசரமான வைபரீத்யங்கள் ஏற்பட்டிருக்கின்றமையை அடியேன் குவாலாக அறிந்துள்ளேன்; அதில் எள்ளவும் ஸம்ஶயமில்லை. ''ஸம்ஸ்ப்ருஶந்'' இத்யாதி ஶ்லோகத்திற்கு நம் ஆசார்யர்கள் அருளிச்செய்த அர்த்தம் நன்கு பொருந்துமாறு அந்த ஶ்லோகம் எந்த ப்ரகரணத்தில் இருக்கவேண்டுமோ அந்த ப்ரகரணத்தில் தானே அந்த ஶ்லோகம் அமையப் பெற்ற மஹாபாரத ஶ்ரீகோஶம் யாரிடத்திலாவது கிடைக்கக்கூடுமா? ப்ராசீநதாள கோஶங்களைச் சேமித்து வைத்திருப்பவர் பலருண்டே. அவற்றில் இந்த ஶ்லோகம் க்ரமமான ஸ்தானத்தில் அமைந்திருக்கின்றதாவென்பதை யாரேனுமொரு மஹாநுபாவர் பரிச்ரமப்பட்டுக் கண்டறிந்து வெளியிடுவரேல் தலையல்லால் கைம்மாறிலேன்.

இந்த ப்ரஸக்தியிலே மற்றொரு விஷயமும் காட்டப்படுகின்றது. ஶ்ரீவேதாந்த தேசிகனுடைய ரஹஸ்யத்ரய ஸார க்ரந்தத்தில் இருபத்தைந்தாம் அதிகாரமான ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்தில் **''விது$_3$ராந்நாநி பு$_3$பு$_4$ஜே ஶுசீநி கு$_3$ணவந்தி ச''** என்றிதைக் கேட்டு துர்யோதனன் 'பீ$_4$ஷ்ம த்$_3$ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மது$_4$ஸூதந! கிமர்த்த$_2$ம் புண்ட$_3$ரீகாக்ஷ! பு$_4$க்தம் வ்ருஷல போ$_4$ஜநம்? என்று கேட்க; ''த்$_3$விஷத$_3$ந்நம் ந போ$_4$க்தவ்யம், த்$_3$விஷந்தம் நைவ போ$_4$ஜயேத் பாண்ட$_3$வாந் த்$_3$விஷஸே ராஜந்! மம ப்ராணா ஹி பாண்ட$_3$வா:'' என்று உத்தரமருளிச் செய்கையாலே ... என்கிற வாக்கியங்கள் காணப்படுகின்றன. இதுவும் மூல விருத்தமாயிரா நின்றது.

''**விது$_3$ராந்நாநி பு$_3$பு$_4$ஜே**'' இத்யாதி ஶ்லோகம் முந்தினதாகவும், ''**த்$_3$விஷத$_3$ந்நம் ந போ$_4$க்தவ்யம்**'' இத்யாதிஶ்லோகம் பிந்தினதாகவுமன்றோ தேசிகனால் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. மூலத்தில் அங்ஙனில்லை. உத்யோகபர்வத்தில் 91ஆவது அத்யாயத்தில் 27ஆவது ஶ்லோகமாக ''**த்$_3$விஷத$_3$ந்நம்**'' என்னும் ஶ்லோகமும், 45ஆவது ஶ்லோகமாக '**விது$_3$ராந்நாநி பு$_3$பு$_4$ஜே**' என்னும் ஶ்லோகமும் அச்சுப் புத்தகத்திற் காண்கிறது. ''**பீஷ்மத்$_3$ரோணா வதிக்ரம்ய**'' என்கிற ஸுப்ரஸித்தமான ஶ்லோகம் இந்த ப்ரகரணத்தில் அடியோடு காணப்படவில்லை. விதுரருடைய அடிசிலைக் கண்ணபிரான் அமுது செய்த பிறகு அப்பிரானை துர்யோதனன் அதிக்ஷேபித்துக் கேட்பதாக தேசிகன் முதலிய நம்மவர்கள் அருளிச் செய்திருக்கிறபடிக் கிணங்க இப்போதைய மஹாபாரதத்தில் ஶ்லோகங்களின் ஆநுபூர்வி அமைந்திருக்கவில்லை.

இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் நாம் ஆராயப் புகுங்கால் மூலக்ரந்தங்கள்

எல்லைகடந்த விகாரத்தை அடைந்திட்டன வாக அறுதியிடுதல் இன்றியமையாததாகின் றது. மற்றுள்ள புராணங்களிலும் ஸ்ரீ பாஞ்ச ராத்ர ஸம்ஹிதைகளிலும் நுழைந்து பார்த்தாலோ, அவற்றிலுள்ள வியர்யாஸங் கள் பேச்சுக்கு நிலமல்ல. அந்தணர் நூலாயும் மூலப்ரமாணமாயுமுள்ள வேதங்களின் உப ப்ரும்ஹணங்களான இதிஹாஸ புராணுதி களைப் பரிஷ்காரப் படுத்துதல் நமக்கு முக்கியமான கைங்கர்யமல்லவா? இவ்விஷயந்தன்னை முக்கியமாகக் குறிக்கொள்வாருண்டா?

ஸ்ரீவசநபூஷணத்தில் இரண்டாம் ப்ரகரணத்தில் ''அழகுக்கிட்ட சட்டை அணைக்கைக்கு விரோதி$_4$யாமாப்போலே' என்ற சூர்ணிகைக்கு அடுத்தபடியாக ஹாரோபி என்றொரு ஸ்ரீஸூக்தி பிள்ளை லோகாசாரியரால் உதாஹரிக்கப்பட்டுள்ளது. அவ்விடத்து வியாக்கியாநத்தில் (ஆய்ப்படியிலும் ஜீயர் படியிலும்)

**ஹாரோபி நார்ப்பித: கண்டே$_2$**
**ஸ்பர்ஸஸம்ரோத$_4$ பீ$_4$ருணு**
**ஆவயோரந்தரே ஜாதா:**
**பர்வதாஸ் ஸரிதோ த்$_3$ருமா:**

என்று அந்த ஸ்லோகம் பூர்ணமாக உதாஹரிக்கப்பட்டு வியாக்கியானிக்கப் பட்டுமிருக்கிறது. இது ஸ்ரீராமாயணத்தில் பெருமாளுடைய திருவாக்காகத் தெரிகின் றது. ஆனல் இந்த ஸ்லோகம் இதுகாறும் வெளிவந்துள்ள ஸ்ரீராமாயணப் பதிப்புக்க ளில் ஒன்றிலும் காணப்படவில்லை. இருபது முப்பது ஓலை ஸ்ரீகோஸங்களை நானா தேஸங் களிலிருந்து ஸம்பாதித்து வைத்துக் கொண்டு ஸோதித்து ஸ்ரீராமாயணத்தைப் பதிப்பித்தவர்கட்கும் இந்த ஸ்லோகம் கிடைக்கவில்லை. நாலைந்து வருஷங்களுக்கு முன் அருமையாகக் கிடைத்ததாக ஒரு ஆப்தர் காட்டினர். சென்னை ஜி.ஏ.நடேசன் அண்டு கம்பெனியாரால் ஆங்கில மொழி பெயர்ப்புடன் வெளியிடப்பட்ட ஸ்ரீராமா யண ஸம்க்ஷேபத்தில் யுத்த காண்டத்தில் (பக்கம் 330ல்) இந்த ஸ்லோகம் அச்சிடப்பட்டுமிருக்கிறது. ஆனல் ''ஆவயோரந்தரே'' என்றவிடத்தில் புஜயோரந்தரே என்று காண்கிறது. இருந்தாலும் ஒருவிதமாக ஸ்லோக ஸந்நிவேசம் கிடைத்தது பரமானந்தத்தை விளைக்கின்றது.

திருவாய்மொழி யீட்டில் (2-2-4) பூவும் பூசனையுந் தகுமே என்ற விடத்தில் **''ஸஏஷ ப்ருது$_2$ தீ$_3$ர்க்காக்ஷஸ் ஸம்ப$_3$ந்தீ$_4$தே ஜநார்த$_3$ந:''** என்று ஸ்ரீபீஷ்மர் நெடும்போது அவனுடைய பரத்வத்தை உபபாதித்துக் கொண்டு போந்து என்றவிடத்தில் அடைய வளைந்தான் அரும்பதத்தில் ''இந்த ஸ்லோகம் இப்போதைய மஹாபாரத க்ரந்தங்களில் பீஷ்மருடைய வாக்யமாகக் காணப்பட வில்லை யென்றும், வேறொரு இடத்தில் தருமபுத்திரரைக் குறித்து மார்க்கண்டேயரு டைய வாக்கியமாகக் காணப்படுகின்ற தென்றும் சொல்லுகிருர்கள் என்று எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதனல் முந்நூறு நானூறு வருஷங்களுக்கு முன்னமே இத்தகைய விபர்யாஸங்கள் விளைந்தனவாக அறியலாகிறது.

நமது பூருவாசாரியர்களின் திவ்ய க்ரந்தங்களில் உதாஹரிக்கப்பட்டுள்ள ப்ரமா ணங்களை மாத்திரமாவது நாம் நன்கு பரிஷ் கரித்து வைத்துக்கொள்வது நலம். இவ்விஷ யத்தில் மஹான்கள் முயற்சி கொள்ளவேணும்.